

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி சீமானூத்து பகுதியில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ் செல்வன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், வருவாய் கோட்டாட்சியர் சண்முக வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நேற்று (12.06.2025) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) .வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் .கே. ஜெ.பிரவீன் குமார், மற்றும் தொடர்புடைய சேவைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நார்வே – ஆர்மேனியா நாடுகளில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டிகளில் வென்ற

# தமிழ்நாடு செஸ் வீரர்கள் டி.குகேஷ் - அரவிந்த் சிதம்பரம் - ர.பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, ஜூன் 13 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நார்வே செஸ் போட்டியில் மூன்றாவது இடத்தை பிடித்த நடப்பு இளம் உலக சாம்பியனும், மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது பெற்றவருமான டி.குகேஷ், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதலிடம் பிடித்த அரவிந்த் சிதம்பரம் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு நேற்று (12.6.2025) வாழ்த்துத் தெரிவித்தார்.

அரவிந்த் சிதம்பரம், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் தற்போது FIDE உலக தரவரிசை பட்டியலில் முதல் 10தர இடங்களுக்குள் நுழைந்துள்ளார். அரவிந்த் சிதம்பரம் சென்னையில் கடந்த ஆண்டு SDAT யின் மூலம் நடத்தப்பட்ட சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் மாஸ்டர் பிரிவில் முதலிடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டி.குகேஷ் மற்றும் ர.பிரக்ஞானந்தா இருவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான Elite திட்டத்தின்கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் தங்களை மேலும் தயார்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் எலைட் திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு 30.00 லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது, விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கி பயன்படுத்தவும், வெளிநாடுகளுக்கு சென்று சிறந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி மேற்கொள்ளவும், தொடர்ந்து சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற்று தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்காகவும் எலைட்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

நார்வே செஸ் போட்டி, ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டி ஆகியவற்றில் முன்னணி இடங்களை வென்றதன் மூலம் உலக டாப் 10 தரவரிசையில் இருக்கும் நான்கு இந்திய வீரர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பது விளையாட்டில் உலக அளவில் முன்னணி இடமாக தமிழ்நாட்டினை உருவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்கு சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 113 வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, ஜூன் 13 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுத கரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 113வது நாள் அம்பத்தூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 113 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (12.6.2026) அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 80 பானு நகர் முதல் மெயின் ரோடு புதூர் போலீஸ் பூத் அருகில், சென்னை. 2) வட்டம் 81 துலுக்கானத்தம்மன் கோயில் அருகில் வெங்கடாபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர். ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த. கண்ணபிரான்,

எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S. முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2025) மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கி துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை நேருஜி கலையரங்கில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன்கள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

### முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு

# இந்தியாவிலேயே எடுத்துக்காட்டாக விளங்கியவர் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான்!

## திருவேற்காட்டில் நடைபெற்ற செம்மொழி நாள் பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புகழுரை

திருவள்ளூர், ஜூன் 13;

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திருவேற்காட்டில் நகர கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலை வகித்தார் பொதுக்குழு உறுப்பினர் எஸ் சங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.டி. பிரியா குமார், வார்டு செயலாளர்கள் எம்.காந்தி, டி.வி. இளங்கோவன், ஜி.சத்தியகிரி, பி.கெஜா, டி.குமார், நகர் கழக நிர்வாகிகள் சா. பென்ஜமின், நடராஜ், பானு அரசு, ஜெ.சரவணன், செல்லதுரை, சொ.ஜோதி நாதன், பி. பாண்டுரங்கன், மா. அப்பு(எ) ஜெபராஜன் ஆகியோர் வரவேற்பு உரையாற்றினார்கள் இதில் மாவட்ட கழகச் செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றி 2000 பெண்களுக்கு பல்வேறு நல திட்ட உதவிகள் வழங்கினார் நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில்

மழை பெய்த போது தமிழக முதல்வர் நேரடியாக வந்து தெருத்தெருவாக ஆய்வு செய்து உடனடியாக 27 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை செய்ய உத்தரவிட்டார். அதில் ஏறக்குறைய அனைத்து பணிகளும் முடிவடைந்து விட்டது. அதுதான் திராவிட மாடல் ஆட்சி. ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் செம்பரம்பாக்கம் ஏரி உரிய நேரத்தில் திறக்காததால் ஏற்பட்ட விளைவு காரணமாக 17 லட்சம் பேர் இடம் பெயர்ந்தார்கள். ஒரு பாக்கெட் பால் 200 ரூபாய்க்கு விற்றது. ஏறக்குறைய 14,200 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதமானது. ஒன்றரை லட்சம் கால்நடைகள் அழிந்தன.

ஆனால் கலைஞர் ஆட்சியில் மழையின் போது புழல் ஏரியில் விரிசல் ஏற்பட்டது. இந்த தகவல் கலைஞருக்கு அதிகாலை மூன்று மணிக்கு அவருக்கு தெரிவிக்கப்பட்டது. வடசென்னை மக்கள் பாதிக்கக் கூடாது என்பதற்காக அந்த நேரத்தில் தள்ளு வண்டியில் நேரில் வந்து பணிகளை முடுக்கி விட்டு விரிசல் சரி செய்த பிறகு தான் சென்றார். தகுதி வாய்ந்த முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தியாவிலேயே எடுத்துக்காட்டாக விளங்கியவர் தலைவர் கலைஞர்.

தமிழ்நாட்டில் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது குஜராத்தில் மோடி முதலமைச்சராக இருந்தார். அப்போது குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டு நிறைய சேதமானது. அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு விமானம் மூலம் மருத்துவ உபகரணங்கள், மருந்துகள், மருத்துவர்கள், அதிகாரிகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தவர் கலைஞர். அப்படிப்பட்ட மோடி தான் தற்போது பிரதமராக இருக்கிறார்.

தற்போது தமிழ்நாட்டில் புயல் மழை இடர்பாடு வந்தபோது நாம் கேட்ட நிதியைக் கொடுக்கவில்லை. நமக்கு தர வேண்டிய கல்வித் தொகையை தரவில்லை. 100 நாள் வேலை திட்ட பணத்தை தரவில்லை. நமக்கு தர வேண்டிய ஜிஎஸ்டி பணத்தை தரவில்லை. நம்முடைய பணத்தை தர வக்கில்லாத பிரதமர் மோடி. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாதம் மாதம் பெண்களுக்கு மகளிர் உரிமைத்தொகையை தமிழக முதல்வர் தற்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார். மாதாமாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தகைய கொடுக்கும் ஒரே முதலமைச்சர் தமிழக முதலமைச்சர். பெண்கள் இலவசமாக பேருந்தில் பயணம் செய்ய மகளிர்க்கு விடியல் பயணம் கொடுத்து உள்ளார். காலை சிற்றுண்டி திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் தான் உள்ளது. மேல்படிப்பு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மாத மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கிலோமீட்டருக்கு ஒரு ஆரம்பப்பள்ளி, 3 கிலோ மீட்டருக்கு ஒரு நடுநிலைப்பள்ளி, ஐந்து கிலோ மீட்டருக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி, ஏழு கிலோமீட்டர் ஒரு மேல்நிலைப்பள்ளி என்று தொடங்கினார் .

இன்று தமிழ்நாட்டில் 587 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன என்றால் அதற்கு காரணம் கலைஞருடைய பெருமுயற்சி தான் காரணம். பல்வேறு துறைகளில் தமிழர்கள் என்று சிறந்து விளங்க காரணம் திராவிட மாடல் ஆட்சி தான். நம்முடைய முதலமைச்சர் இரவு பகல் எப்பொழுதும் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள தமிழர்களுக்கும், இந்திய ஒருமைப்பாட்டுக்கும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். என தெரிவித்தார் தலைமைக் கழக பேச்சாளர் செய்தி சாதிக், டெக்சின் ரோமேரியோ தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா , மாவட்டத் துணைச் செயலாளர் எஸ். ஜெயபாலன் மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், பொதுக் குழு உறுப்பினர் த. எத்திராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார், வட்டக் கழக செயலாளர் ஏ.சி.தெய்வசிகாமணி, பி.உமா பதி, கே.பி. எஸ்.சுதாகர், பி.பிரதானம், ம.விநாயகம், ரங்கதுரை, என்.பி.ஜெகன், சாந்தி ராஜா, என்.ராஜ், ஆ.நாராயணன், மு.சுரேஷ், நரேஷ், திவாகர்,சுதாகர், குடியரசன், பசுமை ஐ.ஜாக்கப், ஜி.ஆசை தம்பி, அக்னி ராஜேஷ், பேபிஸ்ரீ, விஜயசாரதி, பால்ராஜ், கணேஷ், சுபசங்கரன், டி.ரவி, ராஜ்குமார், செந்தில், அமலேஷ்வரி, எம்.ராஜேஷ், சுந்தரவேல், கோ.ரஜினி, குமாரமங்கலம், யுவராஜ், இமானுவேல், முத்துவேல், வினோத், வி.பிரபு, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் பு.பரிசமுத்து, பொன்.மனோகரன், துரைகோபால், க.சாது, பி.வி.கே.கண்ணன், பா.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்கள்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

**ஜூன் 13 (2017)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.**

**கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**“தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்” என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**